NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 10 November 2023

# ‘புதிய சட்டம் பொருளியல் மீள்திறனை மேம்படுத்தும்’

சிறிய, திறந்த பொருளியலான சிங்கப்பூர் நீடித்து நிலைத்திருப்பது, உலக சவால்களைச் சமாளிப்பதற்கு ஏற்றவாறு தன் உத்திகளை சூழலுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளும் திறனைப் பொறுத்துள்ளது. அத்துடன் பொருளியல், பாதுகாப்பு நலன்களுக்கு இடையிலான இணைப்பை அதன் போட்டியாளர்களைவிட சிறப்பாக நிர்வகிப்பதையும் பொறுத்தது என்று வர்த்தக, தொழில் அமைச்சர் கான் கிம் யோங் (படம்) வியாழக்கிழமை தெரிவித்தார்.



திங்கட்கிழமை அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமான துறைகளில் பெரிய முதலீடுகளை ஒழுங்கு படுத்துவதற்கான புதிய சட்டம், நாட்டின் பொருளியல் மீள்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான உத்தியின் ஓர் அங்கமாகும் என்று அவர் கூறினார்.

“நிலையான, பாதுகாப்பான, சிங்கப்பூர் மீது நம்பிக்கை வைத்து வர்த்தகங்கள் முதலீடு செய்வதற்குரிய நம்பிக்கைக்குரிய மையமாக நாட்டின் நிலைப்பாட்டை இந்தச் சட்டம் வலுப்படுத்தும்,” என்றார் அமைச்சர்.

ஆர்ச்சர்ட் ஹோட்டலில் கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த 39வது சிங்கப்பூர் பொருளியல் வட்டமேசை மாநாட்டில் அமைச்சர் கான் பேசினார்.

விநியோகக் கட்டமைப்பையும் கூட்டணிகளையும் மறுசீரமைத்தல், முன்னுரிமைகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிகளவில் கொந்தளிப்பாக உள்ள உலக ஒழுங்கை சிங்கப்பூர் வழிநடத்த உதவுவதற்காக திரு கான் கோடிட்டுக் காட்டிய பல உத்திகளில் இதுவும் ஒன்றாகும்.

அடுத்த சில வாரங்களுக்கு அரசாங்கம் தொழில்துறையாளர்களுடன் கலந்துரையாடும். குறிப்பாக, இந்த மசோதாவின் கீழ் பரிசீலிக்கப்படும் நிறுவனங்களுடன் அந்த உடையாடல்கள் நடக்கும் என்று அவர் கூறினார்.

“மசோதாவின் விவரங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் மசோதாவைச் செயல்படுத்துவது குறித்த விவரங்களிலும் அவர் களுடன் இணைந்து செயல்படுவோம்,” என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டவுடன் அதைச் செயல்படுத்தவும் வணிகங்கள், முதலீட்டாளர்களை அணுக்கமாக ஈடுபடுத்தவும் ஒரு தனிப்பட்ட அலுவலகம் அமைக்கப்படும்.

முடிந்தவரையில் திறனுடன் செயல்படுவதை இது உறுதி செய்யும் என்று திரு கான் கூறினார். தொலைத்தொடர்பு, வங்கி, பொதுப் பயனீடு போன்ற ஒழுங்குபடுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் சிங்கப்பூர் தற்போது துறைவாரியான சட்டங்களையே நம்பியுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி, சொத்துரிமை அல்லது தலைமைத்துவத்தில் சில மாற்றங்கள் ஏற்படும்போது குறிப்பிட்ட நிறுவனங்கள் ஒப்புதல் பெற வேண்டும்.

பெரும்பாலான முக்கிய நிறுவனங்கள் ஏற்கெனவே துறைவாரியான சட்டங்களால் உள்ளடக்கப்பட்டிருப்பதால், ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே புதிய சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக என்று திரு கான் குறிப்பிட்டார்.

இந்த மசோதா வணிகத்திற்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் முழுத் துறைக்கும் அன்றி, தனிப்பட்ட நிறுவனங்களுக்கானது என்றார்.

மற்றோர் உத்தி, சிங்கப்பூரின் இணைப்பை வட்டார, அனைத்துலகப் பொருளியல் களுக்கு விரிவுபடுத்துவதை உள்ளடக்கியது. உலகளாவிய வாய்ப்புகளைப் பெற இது உதவும்.

விதிகளை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய வர்த்தக செயல்முறையை சிங்கப்பூர் தொடர்ந்து வலுப்படுத்த வேண்டும் என்ற திரு கான், உலக வர்த்தக நிறுவன சமரச தீர்வு முறையை சீரமைப்பதில் சிங்கப்பூர் வலுவான ஆதரவளித்து வருவதைக் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், சிங்கப்பூர் முதலீடுகளை வரவேற்பதை உறுதிப்படுத்த உத்தேச மசோதா உதவும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.